இலங்கையிலுள்ள பாரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் ரூ.900 பில்லியனுக்கும் கூடுதலான சொத்துத் தளத்துடன் அதன் உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வூதிய நன்மைகளையும் வினைத்திறன் மிக்க பணிகளையும் தொடர்ந்தும் வழங்குகின்ற வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் புலர்ந்த புதிய யுகமொன்றின் முதலாவது முழுமையான ஆண்டான 2010 இல் ஊழியர் சேம நிதியம் அதன் முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பனவற்றில் விதிவிலக்கான செயலாற்றத்தினைக் கொண்டிருந்த வேளையில் அலுவலர்களின் நிதிய முகாமைத்துவ தேர்ச்சியையும் மேம்படுத்தியது. நிதியம் இவ்வாண்டில் அதன் உறுப்பினர்களுக்கு 12.5 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க உயர்ந்த வீத வருவாயினையும் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

# ஊழியர் சேம நிதியம்

## ஆண்டறிக்கை - 2010

## உள்ளடக்கம்


பக்கம்

### பகுதி 1

| | |
|---|---|
| தொலைநோக்கு மற்றும் பணி | 51 |
| நாணயச் சபைத் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநரிடமிருந்தான செய்தி | 52 |
| தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி | 53 |
| செயலாற்றம் பற்றி முக்கிய பண்புகள் | 54 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு | 56 |
| தொழிற்பாடுகளின் மீளாய்வு | 60 |

### பகுதி 2

**நிதி மற்றும் ஏனைய அறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| | பெறுகை மற்றும் கொடுப்பனவுக் கணக்குகள் | 74 |
| | காசுப்பாய்ச்சல் கூற்று | 75 |
| | வருமானக் கூற்று | 76 |
| | ஐந்தொகை | 77 |
| | முதலீட்டுக் கூற்று | 78 |
| | பங்கு / உறுப்பினர் செல்வத்தில் ஏற்படும் மாற்றங்களின் கூற்று | 79 |
| | கணக்குகளுக்கான குறிப்புக்கள் - முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் | 80 |
| பெறுகை மற்றும் கொடுப்பனவுக் கணக்கிற்கான குறிப்புக்கள் | | |
| (i) | பெறுகைகள் | 83 |
| (ii) | கொடுப்பனவுகள் | 84 |
| வருமானக் கூற்றுக்கான குறிப்புக்கள் | | |
| (iii) | முதலீட்டு வருமானம் | 85 |
| (iv) | ஏனைய வருமானம் | 85 |
| (v) | தொழிற்பாட்டுச் செலவு | 86 |
| (vi) | முன்கொண்டு வரப்பட்ட வருமானக்கூற்று மீதி - சீராக்கத்தின் பின்னர் | 86 |
| ஐந்தொகைக்கான குறிப்புக்கள் | | |
| (vii) | சொத்து, பொறி, கருவிகள் | 87 |
| (viii) | நீண்டகால முதலீடுகள் | 88 |
| (ix) | ஏனைய நடைமுறை சொத்துக்கள் / பெறத்தக்கவை | 88 |
| (x) | குறுகியகால முதலீடுகள் | 88 |
| (xi) | காசும் காசிற்கு சமமானவைகளும் | 88 |
| (xii) | ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 89 |
| (xiii) | உறுப்பினர் மீதிகள் | 89 |
| (xiv) | ஒதுக்கங்கள் | 89 |
| முதலீட்டுக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | | |
| (xv) | இலங்கை ரூபாக் கடன் | 90 |
| (xvi) | திறைசேரி முறிகள் | 91 |
| (xvii) | திறைசேரி உண்டியல்கள் | 92 |
| (xviii) | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் | 92 |
| (xix) | கம்பனித் தொகுதிக் கடன்களும் ஏனைய முதலீடுகளும் | 93 |
| (xx) | பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குகள் | 94 |
| (xxi) | முதலீடுகளின் அசைவு | 97 |
| (xxii) | சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டின் பகுப்பாய்வு | 99 |

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 100

## பகுதி 3


| | | | |
|---|---|---|---|
| அட்டவணை | 1 | முதலீடுகள், முதிர்ச்சிகள், முதலீடுகள் மீதான வருவாய் (1975-2010) | 157 |
| அட்டவணை | 2 | உறுப்பினர் நிலுவை மீதான வருவாய் வீதம் (1980-2010) | 158 |
| அட்டவணை | 3 | உறுப்பினர் நிலுவைகள், வட்டி மற்றும் அவற்றின் மீதான பயனுறுதி வாய்ந்த வருவாய் வீதம் (1972-2010) | 159 |
| அட்டவணை | 4 | முதலீட்டுப்பட்டியல் கூற்று (1979-2010) | 160 |
| அட்டவணை | 5 | தொகுக்கப்பட்டகாசுப்பாய்ச்சல் கூற்று (நாணய சபை) (1977-2010) | 161 |
| அட்டவணை | 6 | வருமானக் கூற்றின் சுருக்கம் (1988-2010) | 163 |

## எமது தொலைநோக்கு

எமது உறுப்பினர்கள் நிறைந்த ஓய்வு கால வாழ்க்கையை
வாழச் செய்வதனை இயலச் செய்யும் விதத்தில்
இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட
ஓய்வு கால நிதியமாகத் திகழச் செய்தல்.

## எமது பணி

முன்மதியும் நவீனத்துவமும் கொண்ட முகாமைத்துவத்தினூடாக
எமது உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுகால
நன்மைகளையும் வினைத்திறன்மிக்க
பணிகளையும் வழங்குதல்.

# நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி



2009 மேயில் மூன்று தசாப்த காலமாக நீடித்த மோதல்கள் முடிவடைந்தமையுடன், இலங்கையானது வளர்ச்சியையும் சுபீட்சத்தையும் கொண்ட புதிய யுகமொன்றிற்குள் நுழைந்திருக்கின்றது. சவால்கள் நிறைந்த வெளிநாட்டுச் சூழல்களுக்கு மத்தியிலும் சமாதானத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்ற விதத்தில் இலங்கையின் பொருளாதாரம் 8 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. நாட்டில் நிலவிய பொருளாதாரம் மற்றும் அரசியல் உறுதிப்பாடு மற்றும் மேம்பட்ட பேரண்ட பொருளாதார நிலைமைகள் என்பன 2010இல் தாழ்ந்த வட்டி வீத அமைப்பு, நடு ஒற்றை இலக்க பணவீக்கம், உறுதியான செலாவணி வீதம் மற்றும் தாழ்ந்தமட்ட தொழிலின்மை வீதம் என்பனவற்றிற்கு வழிவகுத்தன. இச்சாதகமான பேரண்ட பொருளாதார நிலைமைகள் நாட்டின் மீது முதலீட்டாளர் நம்பிக்கையினை உத்வேகமடையச் செய்தது. ஏற்கனவேயுள்ளவற்றிலும் புதிய நடவடிக்கைத் துறைகளிலும் முதலீடுகளை அதிகரிக்கச் செய்ததுடன் வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் மேலும் தூண்டுதலை வழங்குகின்றது.

நாட்டின் மிகப் பாரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் தனியார் மற்றும் அரசுசார் துறைகளினது ஊழியர்களின் கட்டாய சேமிப்புக்களைத் திரட்டும் ஊக்கியாக தொடர்ந்தும் இருந்துவரும். நிதியத்தின் முதலீட்டு உபாயமானது தற்பொழுது நிலவுகின்ற தாழ்ந்த வட்டி வீத சூழலில் அதன் உறுப்பினர்களுக்கு குறிப்பிடத்தக்களவிற்குச் சாதகமான உண்மைவீத வருமானங்களை உறுதிப்படுத்தும் விதத்தில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான முதலீடுகளில் கவனத்தைச் செலுத்தியது. இத்தகைய பின்னணியில், நிதியமானது அது திரட்டுகின்ற சேமிப்புக்களை நீண்டகால முதலீடுகளாக மாற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருந்ததுடன், இது நாட்டு மக்களின் பொருளாதாரத்தினதும் சுபீட்சத்தினதும் வளர்ச்சியை உயர்வடையச் செய்கின்ற அதேவேளையில் நிதியத்தின் முக்கிய குறிக்கோளினை அடையும் விதத்தில் உறுப்பினர்களின் உயர்ந்தபட்ச நன்மைகளையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

உலகளாவிய நெருக்கடிகளின் கசிகின்ற தாக்கங்களிலிருந்தும் மீட்சியடைந்து வருவதன் முக்கிய விளைவாக 2010இல் பல கம்பனிகள் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பதிவு செய்துள்ளன. நிதியமானது குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றத்தினைக் கொண்ட ஆண்டாக இவ்வாண்டினைக் காட்டியதுடன் சொத்துக்கள் ரூ.900 பில்லியன்களைக் கொண்ட தளமொன்றினை அடைந்த வேளையில் அதன் உறுப்பினர்களுக்கு 12.5 சதவீதம் கொண்ட உயர்ந்த வீத வருமானத்தினையும் வழங்கக்கூடியதாக இருந்தது. இவ்வாண்டுப் பகுதியில் நிதியமானது 17 சதவீதத்தினல் வளர்ச்சியடைந்ததுடன் முதலீடுகள் மீதான இதன் வருவாய் 15 சதவீதமான உயர்ந்த வீதத்தில் காணப்பட்டது. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது நீண்டகால நோக்குடன், அடிப்படையில் ஆற்றல் வாய்ந்த பங்குகளில் அதிகரித்தளவில் முதலீடு செய்யப்பட்டதன் மூலம் மேலும் பன்முகப்படுத்தப்பட்டது.

2010இல் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் ஏற்கனவேயுள்ள முறைமையினை மீளப் பொறியியற்படுத்தல், உறுப்பினர்களை மீள்பதிவு செய்தல், பங்களிப்புக்களின் இ-சேகரிப்பு மற்றும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர் தகவல் முறைமை என்பனவற்றை மீளவமைத்து அவற்றின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பிம்பங்களை ஸ்கானிங் முறையில் பதிவிடும் செயற்றிட்டம் தொடங்கப்பட்டுள்ளமையானது நிதியத்தின் தொழிற்பாட்டு செயன்முறையின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் மேலும் அதிகரிக்கும். தற்பொழுது செயற்பாட்டிலிருக்கும் இச்செயற்றிட்டங்கள் 2011 - 2012இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக, நான் நிதியத்தின் மேம்பட்ட செயலாற்றத்திற்காக பெறுமதிமிக்க பங்களிப்பினை நல்கிய அனைத்து ஆர்வலர்களுக்கும், அதாவது, தொழில் திணைக்களம், ஊழியர்கள், நிதியத்தின் உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஊழியர் சேம நிதிய அலுவலர்கள் 2010இல் அடைந்த உன்னதமான சாதனைகளுக்காக எனது வாழ்த்துக்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்கள் தமது கடமைகளை பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்தும் ஆற்றுவார்கள் எனவும் எதிர்பார்க்கிறேன்.

**அஜித் நிவாட் கப்ரால்**
ஆளுநர்
நாணயச் சபையின் தலைவர்

# தொழில் ஆணையாளர் அதிபதியின் வாழ்த்துச் செய்தி



இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதித்திணைக்களத்தின் ஆண்டு அறிக்கைக்கு முதற்கண் எனது உளமார்ந்த வாழ்த்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1958 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதிய 15 ஆம் இலக்க 1958ம் ஆண்டு ஊழியர் சேம நிதிச் சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியமானது அமைக்கப்பட்டு அன்றிலிருந்து இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கின்றது. தற்பொழுது இலங்கையில் காணப்படுகின்ற ஒழுங்கு முறைகளில் முன்னனி வகிக்கும் அமைப்பாக இது திகழ்கின்றது. மற்றும் தனியார் அரசுசார் துறைகளில் தொழில் புரிபவர்களினது ஓய்வு காலத்தினை வசதியுடையதும் பாதுகாப்புடையதாக்கவும் இது உதவுகின்றது.

ஊழியர் சேம நிதியமானது தனது நன்மைகள் கொடுப்பனவுச் செயற்பாட்டினை பிராந்தியங்களில் உள்ள அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தியதன் மூலம் கொடுப்பனவுகளை விரைவாக மேற்கொள்வதற்கு உதவியுள்ளது. ஊ.சே.நி. அங்கத்தவர் கணக்கிற்கு உரித்துடைய சரியான அங்கத்தவரை அடையாளம் காண்பதற்காக ஒருவரது தே.அ.அ. இலக்கமே அவரது அங்கத்தவர் இலக்கமாக பயன்படுத்தும் நோக்கத்துடன் அங்கத்தவர்களை மீள் - பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தேவைப்படும் அங்கத்தவர்களது தகவல்களை கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படம் போன்றவற்றைத் திரட்டும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அங்கத்தவர் ஒருவர் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது அவரது பெருவிரல் அடையாளம் மின்னியல் ஊடகம் மூலம் பெறப்பட்டு எங்கள் அலுவலகத்தில் உள்ள அவரது தகவல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். தற்பொழுத ஒருவர் நிதியத்துடன் இணையும் பொழுது அவரது தேசிய அடையாள அட்டை இலக்கமே அவரது அங்கத்தவர் இலக்கமாகப் பயன்படுத்தப்படுதவற்கான அறிவுறுத்தல்களும் அதற்குத் தேவையான மூலவளங்களும் சகல மாவட்ட அலுவலகங்களில் உள்ள தொழில் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஊ.சே.நி. நன்மைகளைப் பெறுதல் பொருட்டு இலங்கை மத்திய வங்கிக்கு தீர்மானக் கடிதம் அனுப்பப்படுவதிலிருந்து அங்கத்தவரின் வங்கிக் கணக்கிற்கு நன்மைகள் வைப்புச் செய்யப்படும் வரையுமான செயல்கள் அங்கத்தவரின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகளினதும் வெளிப்படைத் தன்மையானது மேலும் மேம்படுத்தப்படுகின்றது.

அங்கத்தவர்களின் நிதிகளைச் சேகரித்த தொழில் ஆணையாளரின் கணக்குகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஊ.சே.நி. க்கு பங்களிப்பு செய்வதில் தவறுகளை புரிபவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவத்திற்குமான நிகழ்ச்சித் திட்டத்ததைச் செயற்படுத்த புதிய தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகளைத் திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

மேலும் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து இன்றைய மின்னியல் ஊடகங்களினூடாக நிதியத்தின் பங்களிப்பினை திரட்டும் செயன்முறையை ஒழுங்கமைக்கும் நிகழ்ச்சிகளை செய்து வருகின்றது.

இலங்கையில் உள்ள தனியார் மற்றும் பகுதி தனியார் துறைகளின் தரங்களை விரிவுபடுத்தும் முயற்சியின் போது இலங்கையில் உள்ள தொழிற்படையினர் மற்றும் தொழில்தருநர்கள் அதே போல் நிர்வாக, நிதிசார்ந்த தொழில்களில் ஈடுபடுகின்ற நிறுவனங்களில் தொழில் புரிகின்ற அல்லது அலுவலர்களுக்கும் இவ் ஆண்டறிக்கையானது பெறுமதி வாய்ந்ததாகவும் பயனுடையதாகவும் அமையும் என்பதை நான் நம்புகிறேன்.

**திருமதி வி.பி.பி.கே. வீரசிங்க**

தொழில் ஆணையாளர் அதிபதி

# செயலாற்றம் பற்றிய முக்கிய பண்புகள்

**அட்டவணை 1** நிதியியல் பண்புகள்

| விடயம் | 2009 | 2010 |
|---|---|---|
| பங்களிப்புக்கள் | 48,712 | 54,796 |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் | 31,901 | 34,896 |
| தேறிய பங்களிப்புக்கள் | 16,811 | 19,900 |
| மொத்த வருமானம் | 109,617 | 121,256 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 90,691 | 96,268 |
| சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் (சதவீதம்) | 16.0 | 15.0 |
| ஒதுக்குகளுக்கான மாற்றல் | 9,325 | 13,000 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | 763 | 824 |
| மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவுகள் | 0.70 | 0.68 |

**வரைபடம் 1** உறுப்பினர் கணக்குகள்




**வரைபடம் 2** நிதியத்தின் வளர்ச்சி




**வரைபடம் 3** செலுத்தப்பட்ட வட்டி



## தொழிற்பாடுகளின் முக்கிய பண்புகள்

- உறுப்பினர்களுக்கு 12.5 சதவீதத்தில் வட்டி செலுத்தப்பட்டது.
- உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 13.3 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. பங்களிக்கின்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 2.3 மில்லியனுக்கு 0.2 மில்லியனால் அதிகரித்தது.
- 104,528 உறுப்பினர்களுக்கு ரூ.34,896 மில்லியன் கொண்ட ஓய்வூதிய நன்மை வழங்கப்பட்டது.
- பங்கேற்கின்ற கொடுகடன் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்காக 13,848 உறுப்பினர்களுக்கு அவர்களது ஊ.சே.நிதியக் கணக்கு நிலுவைகளுக்கெதிராக உத்தரவாதச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆர்வலர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக 13 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் 3 நடமாடும் சேவைகளும் நடத்தப்பட்டன.
- எதிர்கால அபிவிருத்திகளுக்கு வசதியளிப்பதற்காக ஏற்கனவேயுள்ள உறுப்பினர் கணக்கீட்டு முறைமை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

# ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

1958ஆம் ஆண்டு 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேம நிதியமானது, தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதற்கான கட்டாய பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி தொழில் ஆணையாளர் நிதியத்தின் நிருவாக ஆணையாளராக செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராக செயற்படுவதற்கான அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாணயச் சபை, சட்டத்தின் மூலம் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத்திற்கு வழங்கியிருக்கின்றது.

தற்பொழுது நிதியத்திற்கான குறைந்தபட்ச கட்டாய பங்களிப்பு வீதம் ஊ.சே. நிதிய உறுப்பினரின் மொத்த மாதாந்த வருவாயில் 20 சதவீதமாகும். ஊ.சே. நிதியத்திற்கு ஊழியர்களும் தொழில்தருநர்களும் உறுப்பினர்களின் மொத்த வருவாயில் முறையே 8 சதவீதத்தினையும் 12 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பங்களிப்புக்களையும் ஊழியர் விபரங்களையும் நிதியத்திற்கு காலத்திற்குக் காலம் அனுப்பி வைப்பது தொழில்தருநரின் பொறுப்பாகும். 150 ஊழியர்களுக்கும் குறைவானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் (சி வகை) பங்களிப்புகளையும் தொடர்பான விபரங்களையும் (படிவம் சி) மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்க வேண்டியதுடன் 150 ஊழியர்களுக்கும் கூடுதலானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் பங்களிப்புக்களை மாதாந்தமும் தொடர்பான உறுப்பினர் விபரங்களை (படிவம் சி3) ஆண்டிற்கு இரு தடவையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதியத்தின் உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வயதினை அடைந்ததும் (பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும்) அவர்களது ஓய்வூதிய நன்மைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். ஓய்வு பெறும் போது மீளப் பெற்றுக் கொள்வது தவிர, புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணங்களின் பொருட்டும் உறுப்பினர்கள் தமது நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். இந்த உறுப்பினரின் சட்ட ரீதியான வாரிசுகள் உறுப்பினர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவராவர். ஓய்வூதிய நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே. நிதியம் உறுப்பினர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவைகளை பிணையாக வைத்து அனுமதிக்கப்பட்ட ஆறு கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கின்றது.

## தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

தொழில்தருநர்களையும் நிதியத்தின் உறுப்பினர்களையும் பதிவு செய்தல்

ஊ.சே. நிதியச் சட்டத்திற்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதுடன் உறுப்பினர் பங்களிப்புக்களை செலுத்தாதவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்

தாமதமான பங்களிப்புக்களின் மீது தொழில்தருநர்களிடமிருந்து மேலதிகக் கட்டணங்களை அறவிடல்

நன்மைகளின் மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும் அத்தகைய விண்ணப்பங்கள் தொடர்பாக நன்மைகளின் கொடுப்பனவு பற்றி மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கும் தீர்மானக் கடிதங்களை வழங்குவதும்

உறுப்பினர்களின் முன்னைய கணக்குகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கீகாரமளித்தல்

உறுப்பினர்கள், அவர்களது உறுப்பினர் நிலுவைகளை பிணையாக வைத்து ஒப்புதல் பெற்ற கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களை பெற்றுக் கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளித்தல்

## நாணயச் சபையின் தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் பெற்றுக் கொள்ளுதல்

உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்

உயர்ந்தபட்ச வருவாய்களைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் நிதியங்களை முதலீடு செய்யும் அதே வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

தொழில் உறவுகள் மற்றும் மனித வலு அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு வருடாந்த வட்டியை வரவு வைத்தல்

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதத்திற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்

ஆண்டுக் கணக்குகளைத் தயாரிப்பதும் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்களை உறுப்பிர்களுக்கு வழங்குவதும்

உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களைப் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் தொடர்பான கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர் நிலுவைகள் தொடர்பான சான்றிதழை வழங்குதல்

ஒவ்வொரு ஆண்டின் இறுதித் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களை சமர்ப்பித்தல்

## 31.12.2010 இல் உள்ளவாறு மூத்த முகாமைத்துவக் குழு

### தொழில் திணைக்களம் (ஊ.சே.நி. பிரிவு)

| | | |
|---|---|---|
| திரு. டி பி கே ஆர் வீரகூன் | தொழில் ஆணையாளர் | |
| திருமதி. கே எச் டபிள்யூ கருணாரத்ன | துணை தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/நிருவாகம் |
| திருமதி. எஸ் டி சித்திரா | துணை தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/மீளளிப்பு |
| திரு. யூ பி ஆர் சிறிநாகா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. ஜி டபிள்யூ என் விறாஜி | உதவி தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/கொடுப்பனவு |
| திரு. ரி யோகராஜா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. டி ஆர் பெரேரா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. பீ. வசந்தன் | உதவி தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/தகவல் தொழில்நுட்பம் |
| திரு. என் சந்திரகாசன் | உதவி தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/மத்திய கோப்புப் பிரிவு |
| திருமதி. என் எம் வை துசாறி | உதவி தொழில் ஆணையாளர் | ஊ.சே.நி/எல் பிரிவு |

### இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதிய திணைக்களம்

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திருமதி. ஆர். தீரசிங்க | கண்காணிப்பாளர் | |
| திருமதி. கே குணதிலக | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திருமதி சி எம் டி என் கே செனிவிரத்ன | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திரு. எல் டி டி வை பெரேரா | துணை கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஏ ஜி யூ திலகரத்ன | துணை கண்காணிப்பாளர் | |
| திரு. வி பாஸ்கரன் | துணை கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் ஏ எல் முத்துக்குமார | துணை கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் எஸ் பி த சில்வா | உதவிக் கண்காணிப்பாளர் | அலுவலக பணிகள் மற்றும் நிருவாகம் |
| திருமதி. எஸ் டபிள்யு எம் சி ஐ பெரேரா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஏ முதுதந்திரி | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஜி ஆர் எம் வி எஸ் ரத்னப்பிரியா | உதவிக் கண்காணிப்பாளர் | கண்காணிப்பாளர் அலுவலகம் |
| செல்வி ஜி பீ என் ஏ சமரநாயக்கா | முகாமைத்துவப் பயிலுனர் | சேகரிப்பு |
| திருமதி. ரி டி எஸ் பத்பேரிய | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீள் பதிவுச் செயற்றிட்டம் |
| திரு. வி எஸ் சந்திரசோமா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ கே குணசிறி | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீள் பதிவுத் திருத்தம் |
| திரு. கே ஜி திலகசிறி | உதவிக் கண்காணிப்பாளர் | |

| | | |
|---|---|---|
| திருமதி டபிள்யு ஏ பி தர்மதாசா | உதவிக் கண்காணிப்பாளர் | நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு |
| திரு. டி டி ஜெயசிறி | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. சுனில் கொஸ்வத்தகே | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டபிள்யூ எம் எஸ் அபேயகூன் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே ஜி எஸ் த சில்வா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | கூற்றுப்படுத்தப்பட்ட பங்களிப்புப் பிரிவு |
| திருமதி பி எச் டி ஏ அத்தநாயக்கா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி பி டி என் குணதிலக | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திருமதி. ஜி எச் பி பி சியாமளி | உதவிக் கண்காணிப்பாளர் | நிதிய முகாமைத்துவப் பிரிவு |
| திருமதி. எஸ் பி வை டபிள்யூ சேனாதீர | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. பீ எச் ஐ எஸ் குமார | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி டி பி உடுகமகோறள | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திரு. எஸ் பதுமநாபன் | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திரு. ரி உதயசீலன் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி பீ எம் டபிள்யூ எஸ் பாலசூரியா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யூ ஜி ஆர் ஹர்சபிரியா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் எஸ் எம் குசாம் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஜி ஏ சி என் கனேபொல | முகாமைத்துவப் பயிலுனர் | தன்னிச்சையான ஓய்வூதிய நிதியம் |
| திரு. கே எல் ஏ சி என் அனுராதா | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திருமதி. டபிள்யூ ஜி என் பி குமாரி | உதவிக் கண்காணிப்பாளர் | கணக்குகள் மற்றும் தீர்ப்பனவுப் பிரிவு |
| செல்வி ஜி பீ எம் பி திசநாயக்கா | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திரு. எம் எம் சுனில் சாந்த | உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேடுகள் முகாமைத்துவப் பிரிவு |
| செல்வி டி வை எஸ் மகாகெதறவத்தே | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திரு. எச் எம் ஜெயசிங்க பண்டா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருத்தப்பட்ட பதிவேடுகள் பிரிவு |
| திருமதி. வை சி எம் விஜேதிலக | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. கே எஸ் எஸ் அமரசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி எம் ஏ நஜீமா | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திருமதி. எச் ஏ எஸ் குலசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | வீடமைப்புக் கடன் |
| திரு. டபிள்யூ ஏ நந்தசேன | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்பு இறுதிப்படுத்தும் பிரிவு |
| திரு. எம் விக்கிரமரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. பி எஸ் சிறிதிலக | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்பு கட்டுப்பாட்டுப் பிரிவு |
| திரு. வி எல் டபிள்யூ செனிவிரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்பு கொடுப்பனவுப் பிரிவு |
| திரு. பி பி ஜெயசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி கே கே சி எஸ் கன்னங்கரா | முகாமைத்துவப் பயிலுனர் | |
| திருமதி வி கே தம்பாகலாகே | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பொது மக்கள் தொடர்பு மற்றும் விசாரணைப் பிரிவு |
| திரு. ஜி. பிரேமதாசா | உதவிக் கண்காணிப்பாளர் | |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

## பேரண்டப் பொருளாதார மீளாய்வு 2010

2010இல் இலங்கையின் பொருளாதாரம் 8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், இது, 1978இற்குப் பின்னர் அடையப்பட்ட மிக உயர்ந்த உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதமாகவும் காணப்பட்டது. இவ்வரவேற்கத்தக்க வளர்ச்சி செயலாற்றமானது, 2009 மேயில் ஏறத்தாழ மூன்று தசாப்த காலமாக நீண்ட உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்த பின்னரான இவ்வாண்டில் நாட்டில் நிலவிய சாதகமான நிலமைகளின் பிரதிபலிப்பாகும். இவற்றைவிட தூண்டுதலளிக்கும் உள்நாட்டு நிலமைகள், மந்தத்திலிருந்து உலகளாவிய பொருளா-தாரம் மீட்சியடைந்தமை என்பன இவ்வாண்டில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

பொருளாதாரத்தில் காணப்படும் மேல் நோக்கிய வளர்ச்சி உத்வேகம் பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளினாலும் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது. மொ.உ.உற்பத்திக்கு 11.9 சதவீதத்தினைப் பங்களிக்கும் வேளாண்மைத் துறை 7 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றது. கைத்தொழில் துறை 8.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொ.உ.உற்பத்திக்கு 28.7 சதவீதத்தினைப் பங்களித்த வேளையில் பணிகள் துறை 8 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டு மொ.உ.உற்பத்தியில் 59.4 சதவீதத்திற்குப் பங்களித்தது.

வலுவான அத்திவாரங்கள் மற்றும் முன்மதியுடைய பேரண்டப் பொருளாதார கொள்கைகளின் ஆதரவுடன் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியும் உறுதிப்பாடும் முதலீட்டாளர் நம்பிக்கையினை ஆர்வமுறச் செய்தமையின் விளைவாக வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சலில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. உள்நாட்டுப் பக்கத்தில், அரச முதலீடுகள் முக்கியமாக மிக அவசியமான உட்கட்டமைப்பின் அபிவிருத்தியில் கவனம் செலுத்திய வேளையில் தனியார் முதலீடுகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நேரடியான உற்பத்தி நடவடிக்கையில் அவதானிக்கப்பட்டமையின் மூலம் இது உயர்ந்த வெளியீட்டு வளர்ச்சிக்கு பங்களித்தது.

பொருளாதாரம் உறுதியடைந்தமையானது சாதகமான மட்டங்களில் காணப்பட்ட வட்டி வீதங்கள், பணவீக்கம் மற்றும் செலாவணி வீதங்கள் போன்ற முக்கியமான குறிகாட்டிகளில் பிரதிபலித்தது. 2010இல் பணவீக்கம் நடு ஒற்றை இலக்கத்தில் காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான

வரைபடம் 4 **மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம்**




வரைபடம் 5 **பணவீக்கம்**



பணவீக்கம் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 5.9 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் இது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2010 திசெம்பரில் 6.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, விலைகளில் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்கு, இறக்குமதித் தீர்வைகளில் செய்யப்பட்ட சீராக்கங்கள் மற்றும் முன்மதியுடைய நாணயக் கொள்கை என்பன 2010இல் குறைந்த பணவீக்கம் பேணப்பட உதவின.

2009இன் 5.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 தொழிலின்மை வீதம் 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையானது அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக தொழில் வாய்ப்புக்கள் அதிகளவில் கிடைத்தமையினைப் பிரதிபலித்தது.

கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகளிலிருந்தான உயர்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக 2010இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 17.3 சதவீதத்தினால் அதிகரித்தன. உயர்ந்த விலைகளும் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்தமையின் காரணமாக முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியும் வருவாய்கள் அதிகரிக்க உதவின. இறக்குமதிகள் மீதான செலவினம் 32.5 சதவீதத்தினால் அதிகரித்தமையின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 5,205 மில்லியனுக்கு அதிகரித்தது. மசகெண்ணெய் உள்ளிட்ட இடைநிலைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு 2010இல் உயர்ந்த இறக்குமதிச் செலவுகளுக்கு காரணமாயின.

எனினும், 2010இல் ஐ.அ.டொலர் 4,100 மில்லியன் கொண்ட தொழிலாளர் பணஅனுப்பல்கள் பெறப்பட்டமையின் காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 1,418 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது. மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளின் உயர்ந்த உட்பாய்ச்சல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை விஞ்சியதுடன் 2010இல் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 921 மில்லியன் கொண்ட திரண்ட மிகையை உருவாக்கின.

2010இல் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6,610 மில்லியன் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினை அல்லது 5.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமான தொகையினை அடைந்தன. இவ்வதிகரிப்பிற்கு, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்து பெறப்பட்ட நிதியம், ப.நா.நிதிய - துணைநில் ஒழுங்கு வசதிகள் தொடர்ந்து கிடைத்தமை, உள்நாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் செயற்றிட்ட நிதியங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன.

2010ஆம் ஆண்டுப் பகுதியில் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டதுடன் மூலதன முதலீடு காத்திரமான முறையில் செலவிடப்பட்டது. வினைத்திறன் மிக்க இறை முகாமைத்துவம், திரண்ட இறைப் பற்றாக்குறையினை 2009இன் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்கு குறைப்பதற்கு அரசாங்கத்தினை இயலச் செய்தது.

நாட்டில் நிலவும் சமாதானம் நிரம்பிய சூழல் மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பனவற்றின் காரணமாக கொழும்பு பங்குச் சந்தை 2010இல் வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2010இல் கொழும்பு பங்குச் சந்தையானது

**வரைபடம் 6** **பங்குச் சந்தைச் சுட்டெண்ணில் அசைவுகள்**



குறிப்பிடத்தக்க அநேகமான அடிப்படை அளவீட்டு குறியீடுகளையெல்லாம் கடந்து உலகின் இரண்டாவது மிகச் சிறந்த செயலாற்றச் சந்தை என்ற இடத்தினைப் பெற்றுக் கொண்டது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் மிலங்கா விலைச் சுட்டெண் ஆகிய இரண்டும் வரலாற்றில் முதற்றடவையாக 7,000 மட்டத்தினை விஞ்சியதுடன் சந்தை மூலதனமயமாக்கல் 2010இல் இரண்டு றில்லியன் ரூபா மட்டத்தினைக் கடந்து முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பிரதிபலித்தது.

பணச் சந்தையின் திரவத்தன்மை 2010இல் தொடர்ந்தும் மிகையாகக் காணப்பட்டது. சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியுடனான அரசின் பிணைய இருப்புக்கள் போதுமானதாக இருக்காமையால் இலங்கை மத்திய வங்கி அதன் சொந்தப் பிணையங்களை வெளியிட்டது.

2010 ஒத்தோபரில், மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக முறிகளைக் கடன்படுவதற்கான முறிகள் கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையே கடுமையான போட்டி காணப்பட்டமையினால் சந்தைப் பங்கேற்பாளர்களிடம் காணப்பட்ட மிகையான திரவத்தன்மை அரச பிணையங்களின் குறுங்கால வட்டி வீதங்கள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதங்களுக்கு கீழே வீழ்ச்சியடைவதில் செல்வாக்கினைச் செலுத்தின. இதன்படி, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஓரிரவு மற்றும் தவணை ஏலங்கள் 2010 ஒத்தோபரிலிருந்து இடைநிறுத்தப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்காகவும் குறைந்த வட்டி வீத அமைப்பினைத் தொடர்ந்தும் பேணியது. ஆய்விற்குரிய ஆண்டில், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதற்கு வசதியளிக்கும் நோக்குடன் மத்திய வங்கி நாணயக் கொள்கையினை தளர்த்தியது. இதன்படி, 2010இன் பின்னரைப் பகுதியில் நேர்மாற்று

**வரைபடம் 7 தெரிந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**




மீள்கொள்வனவு வீதமும் மீள்கொள்வனவு வீதமும் குறைக்கப்பட்டதன் காரணமாக கொள்கை வட்டி வீத வீச்சு குறைக்கப்பட்டது. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக 2010இல் சந்தை வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டன. அரச பிணையங்களின் விளைவுகளும் வர்த்தக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்களும் 2010இல் வீழ்ச்சியடைந்து கொள்கை வட்டி வீதங்களில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பிரதிபலித்தன.

## இலங்கையில் ஊ.சே. நிதியமும் ஓய்வூதிய நிதியங்களும்

இலங்கையின் ஓய்வூதிய நிதியங்கள் குடிசார் ஓய்வூதிய திட்டம், ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரசாங்கத்தினால் முகாமைப்படுத்தப்படும் அரச பணிகள் சேம நிதியம் மற்றும் தனியார்

**வரைபடம் 8** **ஓய்வூதிய நிதியங்களின் சொத்துக்களின் உள்ளமைப்பு**




துறையினால் முகாமைப்படுத்தப்படும் 170 ஒப்புதலளிக்கப்பட்ட சேம மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

2010 இறுதியில் இலங்கையின் ஓய்வூதிய நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,179.8 பில்லியன்களாக விளங்கியதுடன், இது நிதியியல் முறைமையிலுள்ள மொத்தச் சொத்துக்களில் 17.7 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊ.சே. நிதியம் நாட்டின் மிகப் பாரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கியதுடன் ஓய்வூதிய தொழில் துறையின் மொத்தச் சொத்துக்களில் 76.4 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது.

## ஊ.சே. நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு

2010 இறுதியில் ஊ.சே. நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.900 பில்லியன்களை அடைந்து, 2009இன் இறுதியில் காணப்பட்ட ரூ.770 பில்லியனை விட 16.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக 2010இல் உறுப்பினர்களின் பங்களிப்புக்களிலிருந்தும் நிதியத்தின் முன்மதியுடைய முகாமைத்துவத்தினூடாகவும் பெறப்பட்டது.

2010இல் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2009இன் 12.8 மில்லியனிலிருந்து 3.9 சதவீதத்தினால் 13.3 மில்லியனுக்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய ஆண்டில் பங்களிக்கும் உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2009இன் 2.1

**வரைபடம் 9** **ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்குகள்**




மில்லியனிலிருந்து 2.3 மில்லியனுக்கு 9.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கையானது நிதியத்தின் உறுப்பினர்களது உண்மையான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் உயர்வாக இருப்பதற்கு சில உறுப்பினர்கள் தமது வேலைகளை மாறும் பொழுது தமது முன்னைய கணக்குகளை ஒன்று சேர்க்காமல் இருப்பதே காரணமாகும். அதேவேளை, பங்களிக்கும்

**வரைபடம் 10** **பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்**



தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2009இன் 61,396 தொழில்தருநர்களுடன் ஒப்பிடுகையில் 62,000 பேருக்கு 1 சதவீதத்தினால் அதிகரித்தது.

## உறுப்பினர் பங்களிப்புக்களும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகளும்

ஆய்விற்குரிய ஆண்டில், ஊழியர் சேம நிதியத்தின் உறுப்பினர்களின் பங்களிப்பு 12.5 சதவீதத்தினால் 2009இன் ரூ.48.7 பில்லியனிலிருந்து ரூ.54.8 பில்லியனுக்கு அதிகரித்தது. 2010இல் ஊ.சே. நிதியம் மீளளிப்பு நன்மைகளாக அதன் உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களின் சட்ட ரீதியான வாரிசுகளுக்கு ரூ.34.9 பில்லியன்களைச் செலுத்தியது. இது, 2009இல் செலுத்தப்பட்ட ரூ.31.9 பில்லியன்களைவிட 9.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். தேறிய பங்களிப்புக்கள் (மீளளிப்பு நன்மைகளைக் கழித்த மொத்த பங்களிப்புக்கள்) முன்னைய ஆண்டின் ரூ.17 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20 பில்லியன்களாகக் காணப்பட்டன.

**அட்டவணை 2 2010 ஊ.சே.நிதிய மீளளிப்புக் கொடுப்பனவுகள்**

| ஊ.சே.நி மீளளிப்புக்கான காரணம் | சதவீதமாக | |
|---|---|---|
| | மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மொத்த மீளளிப்பு நன்மைகள் |
| ஓய்வூதிய வயதை அடைந்தமை | 58.7 | 71.7 |
| திருமணம் காரணமாக ஓய்வு பெற்றமை | 27.6 | 12.4 |
| புலம் பெயர்தல் | 1.6 | 5.5 |
| மருத்துவ காரணங்கள் | 0.9 | 1.3 |
| உறுப்பினரின் மரணம் | 6.2 | 6.4 |
| ஓய்வூதியம் பெற இணைந்து கொண்டமை | 4.9 | 2.6 |
| ஏனையவை | 0.1 | 0.1 |
| மொத்தம் | **100.00** | **100.00** |

ஊ.சே.நிதியத்தினால் பெறப்பட்ட பங்களிப்புக்களின் பெறுகைகள் மற்றும் செலுத்தப்பட்ட மீளளிப்புக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டும் கடந்த ஆண்டுகளிலும் பார்க்க அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டின. உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட ஊ.சே. நிதிய நன்மைகளுக்கான கோரல்களில் பெரும்பாலானவை ஓய்வூதிய வயதை அடைந்தவர்களிடமிருந்தே பெறப்பட்டது. மேலும், மீளளிப்புக்களுக்கான கோரல்களில் குறிப்பிடத்தக்களவு விகிதம் திருமணம் காரணமாக வேலையை இராஜினாமாச் செய்த பெண் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

## நிதியங்களின் முதலீடு

நீண்டகால ஓய்வூதிய நன்மைகள் திட்டம் என்ற ரீதியில், நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது, நீண்ட காலத்தில் உறுப்பினர்களுக்கு சாதகமான உண்மைவீத வருவாய்களை வழங்குகின்ற அதேவேளையில் நிதியத்தின் பெறுமதியினைப் பேணிப் பாதுகாப்பதிலும் போதுமானளவு திரவத்தன்மையினை பேணுவதிலும் முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. எனவே, நிதியத்தின் பெரும் பகுதி அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்ட வேளையில் மீதி அடிப்படையிலேயே ஆற்றல் வாய்ந்ததும் பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான பங்கு மூலதனங்களிலும் உயர்ந்த நம்பகத்தன்மை கொண்ட கம்பனி படுகடன் கருவிகளிலும் முதலீடு செய்யப்பட்டன. உத்தமமான திரவத்தன்மை நிலமையொன்றைப் பேணும் பொருட்டு, ஊ.சே. நிதியத்தின் சிறியதொரு சதவீதம் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற உயர் திரவத்தன்மை கொண்ட பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டன.

## முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

2010 இறுதியில் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியலின் ஏட்டுப் பெறுமதி 2009இன் ரூ.738.1 பில்லியனிலிருந்து 17.5 சதவீதத்தினால் ரூ.867.1 பில்லியனுக்கு அதிகரித்தது. முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கியமாக முதலீடுகளிலிருந்தான வருவாய் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி என்பன மூலம் பெறப்பட்டது. 2010இல் நிதியத்தின் பெரும் பகுதி அரச பிணையங்களில் (94.1 சதவீதம்)

முதலீடு செய்யப்பட்ட வேளையில் 5 சதவீதம் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்கு மூலதனங்களிலும் 0.7 சதவீதம் கம்பனிப் படுகடன் பிணையங்களிலும் முதலீடு செய்யப்பட்டன. மீதி 0.2 சதவீதம் நிதியத்தின் திரவத்தன்மையினைப் பேணுவதற்காக அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவுகளில் முதலீடு செய்யப்பட்டன. முன்னைய ஆண்டில் அரச பிணையங்கள் மற்றும் அரச/ தனியார் துறைப் பிணையங்கள் மீதான முதலீடுகள் முறையே 97.1 சதவீதமாகவும் 2.9 சதவீதமாகவும் காணப்பட்டன. ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பங்கு மூலதன சொத்துப்பட்டியல் 2009இன் ரூ.9.8 பில்லியனிலிருந்து 2010இல் ரூ.43.6

**வரைபடம் 11** 2009 இறுதியில் உள்ளவாறான சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




பில்லியனுக்கு மேலும் அதிகரிக்கப்பட்டதன் மூலம் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மேலும் பன்முகப்படுத்தப்பட்டது.

**வரைபடம் 12** 2010 இறுதியில் உள்ளவாறான சொத்துப் பட்டியலின் உள்ளமைப்பு




## அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள், ரூபாக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப் பட்டியல் 2009இன் ரூ.716.5 பில்லியனிலிருந்து 2010இல் ரூ.815.8 பில்லியனுக்கு ரூ.99.3 பில்லியனால் அதிகரித்தது. 2010 இறுதியில்,

**அட்டவணை 3** ஊ.சே. நிதிய சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு

| துறை | ஊ.சே.நிதிய முதலீடுகள் | |
|---|---|---|
| | ரூ.பில். | பங்கு % |
| அரச துறை | 864.3 | 94.7 |
| அரச வங்கிகளும நியதிச் சபைகளும் | 6.4 | 0.7 |
| தனியார் துறை | 42.0 | 4.6 |
| **மொத்தம்** | **912.7** | **100.00** |

மொத்தச் சொத்துப்பட்டியலில் திறைசேரி முறிகள் சொத்துப்பட்டியல் 89.4 சதவீதமாக விளங்கிய வேளையில் ரூபாக் கடன்கள் 7.7 சதவீதத்திலிருந்து 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2010இல் புதிய ரூபாக் கடன்கள் வழங்கப்படாமையின் காரணமாக முதிர்ச்சியடைந்த பெறுகைகள் வேறு பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டமையே காரணமாகும்.

2010ஆம் ஆண்டுப் பகுதியில் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட மொத்தத் தொகை (அதாவது வட்டி வருமானம், தீர்ப்பனவு நன்மைகள் மற்றும் மூலதன நன்மைகள்) ரூ.118 பில்லியன்களாகக் காணப்பட்டது. இது நிதியத்தின் மொத்த வருமானத்தில் 97 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2010இல் சராசரி அரச பிணையங்களின் சொத்துப்பட்டியலிலிருந்தான வருமானத்தின் தேறல் செய்யப்பட்ட வீதம் 15 சதவீதமாக இருந்தவேளையில் அரச பிணையங்களின் சொத்துப்பட்டியலின் நிறைவேற்றப்பட்ட சராசரி விளைவு 13.2 சதவீதமாகக் காணப்பட்டது.

ஊழியர் சேம நிதிய சொத்துப்பட்டியலிலுள்ள அரச பிணையங்களில் ஏறத்தாழ 89 சதவீதமானவை அடுத்த 5 ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சியடையவுள்ளன.

**அட்டவணை 4 — 2010 இறுதியிலுள்ளவாறு ஊ.சே.நிதிய சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு**

| முதிர்ச்சி | முகப்புப் பெறுமதி ரூ. மில்லியன் | பங்கு % |
|---|---|---|
| 1 ஆண்டிற்கும் குறைவானது | 193,810 | 22.5 |
| 1-2 ஆண்டுகள் | 374,992 | 43.5 |
| 3 - 4 ஆண்டுகள் | 197,615 | 22.9 |
| 5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது | 94,925 | 11.1 |
| **மொத்தம்** | **861,342** | **100.0** |

## பங்கு மூலதனச் சொத்துப்பட்டியல்

பங்கு மூலதன சொத்துப்பட்டியல் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்கு மூலதனங்கள் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், நிதியத்தின் பங்கு மூலதன சொத்துப்பட்டியல் 2009இன் ரூ.9.8 பில்லியனிலிருந்து ரூ.43.6 பில்லியனுக்கு ரூ.33.8 பில்லியனால் அதிகரித்தன. முதலீட்டுச் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்துதல் அதிகரித்துச் செல்லும் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகிய நோக்குகளுடன் பங்குச் சந்தையின் முதலீடுகள் அதிகரிக்கப்பட்டன. இது நடுத்தர காலத்தில் சராசரி வருமானத்திற்கும் கூடுதலான வருவாயினை உழைக்க உதவுமென்பதுடன் இறுதியில் உறுப்பினர்களினது நிதியத்தின் செல்வத்தினையும் உயர்த்தும்.

2010இல் நிதியமானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளிலுள்ள அடிப்படையில் ஆற்றல் வாய்ந்த கம்பனிகளிலும் பன்முகப்படுத்தப்பட்ட ரீதியில் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் பயணங்கள், தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பொறியியல் துறைகளிலும் முதலீடு செய்யப் பட்டன.

2010இல் பங்கு இலாபங்கள் மற்றும் மூலதன நன்மைகள் என்பன மூலமாக பங்கு மூலதன சொத்துப்பட்டியல் நிதியத்திற்கு 2009இல் உழைக்கப்பட்ட ரூ.348 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1.6 பில்லியனை வழங்கியது.

**வரைபடம் 13 — 2010 இறுதியில் உள்ளவாறு பட்டியலிடப்பட்ட பங்குச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு**




## கம்பனி படுகடன் சொத்துப்பட்டியல்

நிதியமானது, கம்பனித் தொகுதிக் கடன்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், ஈட்டின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் போன்ற உயர் நம்பகத்தன்மை கொண்ட முதலீட்டுத்தரக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்டது. 2010இல் நிதியம் கம்பனி படுகடன் சொத்துப்பட்டியலிலிருந்து ரூ.817 மில்லியன்களை உழைத்துக் கொண்டதுடன் சராசரி வருவாய் வீதம் ஆண்டொன்றுக்கு 12.5 சதவீதமாகக் காணப்பட்டது.

## நேர்மாற்று மீள்கொள்வனவும் திறைசேரி முறிக் கடன் வழங்கலும்

நிதியமானது நாளாந்தம் மிகையான காசினை மீள்கொள்வனவுச் சந்தையில் முதலீடு செய்தது. இது நிதியத்தின் திரவத் தன்மையினை முகாமைப்படுத்த உதவும். 2010இல் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்காக நிதியம் திறைசேரி முறிகளை மத்திய வங்கிக்கு கடன் வழங்கியதுடன் அத்தகைய கடன் வழங்கலின் மூலம் ரூ.59 மில்லியன்களை உழைத்துக் கொண்டது.

அதேவேளை நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டில் ரூ.266 மில்லியன்களாக விளங்கின.

## நிதியத்தின் வருமானம்

2010ஆம் ஆண்டிற்குரிய நிதியத்தின் மொத்த வருமானம் 2009இன் ரூ.109.6 பில்லியனிலிருந்து ரூ.11.7 பில்லியன் அல்லது 10.6 சதவீதத்தினால் ரூ.121.3 பில்லியனுக்கு அதிகரித்தது. வருமானத்திற்கான மிக உயர்ந்த பங்காளிப்பாளராக வட்டி வருமானமும் கடன் தீர்ப்பனவு இலாபங்களும் விளங்கி மொத்த வருமானத்தில் 97.5 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்திய வேளையில் பங்கு இலாபங்கள், மூலதன இலாபம் மற்றும் ஏனைய வருமானங்கள் 2.5 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தின.

பங்கிலாப வருமானம் 2009இன் ரூ.132 மில்லியனிலிருந்து 2010இல் ரூ.609 மில்லியனுக்கு ரூ.477 மில்லியனால் அதிகரித்ததுடன் பட்டியலிடப்பட்ட பங்கு மூலதனங்களிலிருந்தான மூலதன இலாபம் 2009இன் ரூ.215 மில்லியனிலிருந்து ரூ.1,053 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு கம்பனிகளின் ஆரோக்கியமான செயலாற்றமும் 2010இல் நிலவிய சந்தை எருதுப் போக்குகளின் நிலைமைகளும் காரணங்களாக அமைந்தன. பொதுவாக மொத்த சொத்துப்பட்டியல் மீதான வருமான வீதம் 2009இன் 16 சதவீதத்திலிருந்து 2010இல் 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2010இல் வட்டி வீதங்கள் குறைவடைந்தமையே காரணமாகும். நிதியத்தின் பெரும் பங்கு நிலையான வருமான பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளமையினால் வட்டி வருமானமும் தீர்ப்பனவு இலாபங்களும் நிதியத்தினது வருமானத்தின் முக்கிய மூலங்களாக விளங்குகின்றன.

## தொழிற்பாட்டுச் செலவினம்

2010இல் நிதியத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் 2009இன் ரூ.763 மில்லியனிலிருந்து ரூ.824 மில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆளணிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது.

எனினும், கடந்த காலங்களைப் போன்றே, நிதியமானது அதன் மொத்த தொழிற்பாட்டுச்

**அட்டவணை 6** **தொழிற்பாட்டுச் செலவினம்**

| செலவின விடயங்கள் | 2009 (ரூ.மில்.) | 2010 (ரூ.மில்.) |
|---|---|---|
| ஆளணி | 370 | 414 |
| நிர்வாகம் | 357 | 368 |
| ஏனையவை | 36 | 42 |
| மொத்தம் | 763 | 824 |
| மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவுகள் | **0.70** | **0.68** |

**வரைபடம் 5** **மொத்த வருமானம்**

| வருமானத்தின் மூலங்கள் | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூ. மில். | பங்கு % | ரூ. மில். | பங்கு % |
| வட்டி | 79,810 | 72.8 | 89,165 | 73.5 |
| தீர்க்கப்பட்ட இலாபங்கள் | 27,337 | 24.9 | 29,060 | 24.0 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம்(அ) | 1,920 | 1.8 | 809 | 0.7 |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம்(அ) | 235 | 0.2 | 1,226 | 1.0 |
| பங்கு இலாபங்கள் | 133 | 0.1 | 610 | 0.5 |
| ஏனையவை | 182 | 0.2 | 386 | 0.3 |
| **மொத்தம்** | **109,617** | **100.0** | **121,256** | **100.0** |

(அ) சந்தைப்படியான இலாபங்கள் உட்பட

செலவினத்தினை மொத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணக் கூடியதாக இருந்தது. மொத்த செலவினத்தினை மொத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்கும் குறைவான அளவில் பேணக் கூடியதாக இருந்தமை கடந்த ஆண்டுகளில் முக்கியமானதொரு பண்பாகக் காணப்பட்டது.

## வரிச் செலவினம்

2010இல் நிதியத்தின் வருமான வரிச் செலவினம் ரூ.8,987 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதனை 2009இன் ரூ.7,604 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகக் காணப்படுகின்றது.

## உறுப்பினர் நிலுவைகளும் செலுத்தப்பட்ட வட்டியும்

2010 இல் ரூ.13,000 மில்லியன் ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பின்னர் ரூ.96,268 மில்லியன் கொண்டதொரு தொகை நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட்டியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது உறுப்பினர் செல்வத்தினை 2009இன் ரூ.752 பில்லியனிலிருந்து ரூ.869 பில்லியனுக்கு 15.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

வரைபடம் 14 உறுப்பினர் நிலுவையும் செலுத்தப்பட்ட வட்டியும்




வீழ்ச்சியடைந்து செல்கின்ற வட்டிச் சூழலொன்றிற்கு மத்தியிலும் நிதியமானது 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கு 12.5 சதவீதம் கொண்ட வட்டியை பிரகடனப்படுத்தக் கூடியதாக இருந்தது.

## இடர்நேர்வு முகாமைத்துவம்

2010 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு, ஊ.சே. நிதியம் மொத்த நிதியியல் முறைமைகளின் சொத்துக்களில் ஏறத்தாழ 14 சதவீதத்தினைக் கொண்டிருப்பதன் காரணமாக நிதியியல் துறையில் முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததொரு மூலமாக விளங்குகின்றது. ஆகவே, நிதியத்துடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவது உறுப்பினர்களுக்கும் அதேபோன்று நாட்டின் முழு நிதியியல் முறைமைக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்நேர்வுகளாக கொடுகடன் இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன காணப்படுகின்றன.

ஒப்பந்த ரீதியான ஒழுங்குகளின்படி இணங்கிக் கொள்ளப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் இணைத்தரப்பினர் அவர்களது நிதியியல் கடப்பாடுகளை கௌரவிக்கத் தவறுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புக்களே கொடுகடன் இடர்நேர்வுகள் எனப்படுகின்றன. நிதியத்தின் பாதுகாப்பினைக் கவனத்திற் கொண்டு, அதன் சொத்துப்பட்டியலில் 94 சதவீதமானவை அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளமையினால் கொடுகடன் இடர்நேர்வு அல்லது செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் குறைக்கப்பட்டுள்ளன. இடர்நேர்வு மற்றும் வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு முழுமையான பகுப்பாய்வுகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட உயர் நம்பகத்தன்மை கொண்ட கம்பனி படுகடன் கருவிகளில் நிதியம் முதலீடு செய்யப்பட்டு வருவதன் காரணமாக அதன் கொடுகடன் இடர்நேர்வுகள் மேலும் குறைந்திருக்கிறது.

நிதியத்தினால் எதிர்நோக்கப்பட்ட சந்தை இடர்நேர்வுகள் வட்டி வீத இடர்நேர்வு, பங்கு விலை இடர்நேர்வு ஆகிய வடிவங்களில் காணப்பட்டன. திறைசேரி முறிகளைக் கொண்ட சொத்துப்பட்டியலின் பெறுமதி சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் அதிகரிப்புக்களின் காரண-மாக மோசமடைவதன் காரணமாக நிதியத்தின் திறைசேரி முறி வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் வட்டி வீத இடர்நேர்வுகளுக்கு உள்ளாகின்றன. சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தணிக்கும் பொருட்டு வேறுபட்ட முதிர்ச்சிகளையும் விளைவுகளையும் கொண்ட திறைசேரி முறிகளைத் தெரிவு செய்வதன் மூலம் நிதியத்தினால் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெற்றிகரமான துறைகளில் அடிப்படையிலேயே ஆற்றல் வாய்ந்த பங்குகளை முதலீடு செய்வதன் மூலம் பங்கு மூலதன சொத்துப்பட்டியலின் பெறுமதி குறைவடைவது அல்லது பங்கு விலை இடர்நேர்வு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், பட்டியலிடப்பட்ட பங்கு மூலதனச் சொத்துப்பட்டியல் வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி, பன்முகப்படுத்தப்பட்ட பங்குடமைகள், சுற்றுலா விடுதி மற்றும் பயணம், கட்டுமானம் மற்றும் பொறியியற்படுத்தல், தயாரிப்பு மற்றும் தொடர்பூட்டல் என்பனவற்றை உள்ளடக்கிய 17 துறைகளுக்குப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

வரவேண்டிய தொகைகள் தேறிய காசுப்பாய்ச்சல்களின் மூலம் பெறப்படுவதனால் நிதியத்தின் திரவத்தன்மை இடர்நேர்வு அல்லது நிதியியல் கடப்பாடுகளை அவற்றிற்குரிய திகதியில் பூர்த்தி செய்யப்பட முடியாமல் போவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தற்பொழுது மாதமொன்றில் பங்களிப்புப் பெறுகைகள் நன்மைகளின் மீளளிப்புக் கொடுப்பனவுகளை விஞ்சிக் காணப்படுவதுடன் நிதியத்திற்கு தேறிய காசுப்பாய்ச்சலையும் உருவாக்குகிறது. திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் போன்ற வர்த்தகப்படுத்தத்தக்க பிணையங்களில் குறிப்பிடத்தக்களவு தொகை முதலீடு செய்யப்பட்டிருப்பதன் மூலம் நிதியம் திரவத்தன்மை இடர்நேர்வுகளுக்கு உள்ளாகக் கூடிய தன்மை குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஊ.சே.நிதியம் ஓரிரவு மீள்கொள்வனவுச் சந்தையில் தீவிரமாக பங்கேற்றமையானது திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்குப் போதுமான நிதியத்தினைப் பேணுவதற்கு நிதியத்தினை இயலச் செய்தது.

தொழிற்பாட்டு வினைத்திறனையும் அதேபோன்று உறுப்பினர்களுக்கான பணியின் பயனுறு தன்மையினையும் உயர்த்தும் நோக்குடன் உறுப்பினர் கணக்கீட்டு முறைமையினை மையப்படுத்துவதற்காக ஏஎஸ்400 முறைமையில் பேணப்பட்ட நிதியத்தின் உறுப்பினர் கணக்குகள் 2010இல் தரமுயர்த்தப்பட்டன. எந்தவொருவித தடையுமில்லாமல் நிதியம் அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்வதனை இயலச் செய்த உடனடி அதேநேர பின்னூட்டல் முறைமைகள் பேணப்பட்டு வருவதன் மூலம் நிதியத்தின் தொழிற்பாட்டு இழப்பு மேலும் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், எதிர்பாராத ஏதேனும் சம்பவம் நிகழும் சந்தர்ப்பமொன்றில் தொழிற்பாடுகள் சுமூகமாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமும் அனர்த்த மீட்பு அமைவிடமும் பரீட்சிக்கப்படுகின்றன.

## வீடமைப்புக் கடன் வசதி

உறுப்பினர்கள், பங்கேற்கின்ற 6 கடன் வழங்கல் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதனை வசதிப்படுத்தும் நோக்குடன் 1998இல் வீடமைப்புக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆய்விற்குரிய ஆண்டில், ரூ.4,512 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலை வழங்குவதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு 13,848 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 2009இல் ரூ.2,661

மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்கள் தொடர்பாக 10,320 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

வீடமைப்புக் கடன் திட்டம் ஊ,சே.நிதியத்தினால் வழங்கப்பட்ட மேலதிக வசதியொன்றாக இருந்த போதும், சில உறுப்பினர்கள் இக் கடனை மீளச் செலுத்தத் தவறியதன் மூலம் இவ்வசதியினைப் புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொள்ள தவறவிட்டனர். இதன் விளைவாக, ஊ.சே. நிதியத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குமிடையிலான ஒப்பந்த ரீதியிலான உடன்படிக்கைக்கிணங்க ஊ.சே. நிதியம் நிலுவையிலுள்ள தவணைப் பணத்தையும் பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட தண்ட வட்டித் தொகையினையும் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து கழித்து அப்பணத்தினை கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கின்றது. இதன் விளைவாக, அத்தகைய உறுப்பினர்களின் ஊ.சே. நிதிய நிலுவை கடுமையாகக் குறைவடைந்து அவர்களின் ஓய்வின் போது மீளளிப்பு நன்மைகள் குறைவடைவதற்கு வழிவகுக்கின்றது. 2010இல் கடன் வழங்கல் நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதம் மாதமொன்றிற்கு ஏறத்தாழ 2 இலிருந்து 3 சதவீதமாக இருந்தது. இது ஏறத்தாழ 36 சதவீதம் கொண்ட வருடாந்த தண்ட வீத தொகையாக விளங்கும்.

